1981 பிப்ரவரி 27]

திரு. சு. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த முறைசாராக் கல்வி திட்டத்திற்கு சமீபத்தில் மத்திய அரசு கொடுத்துவந்த உதவிகளை நிறுத்தி விட்டதாகவும் இதனால் அந்த பள்ளிகள் நடத்தமுடியாமல் மூடப்பட்டிருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது அது பற்றி அரசுக்குத் தெரியுமா? அதேபோல் வேலை இல்லாப் பட்டதாரிகளை தமிழக அரசு நடத்தக் கூடிய அந்தப் பள்ளிகளுக்கு நியமனம் செய்ய முன் வருமா? ஏனென்றால் தற்போது பஞ்சாயத்து யூனியன்களில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்கள் தான் மாலை நேரங்களில் இந்தப் பள்ளிகளை நடத்துவதாக தெரிகிறது. ஆகவே, அப்படி இல்லாமல், வேலையில்லாமல் இருப்பவர்கள் அந்தப் பள்ளிகளில் நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாமல் இருப்பவர்கள் என்று வருகிறபோது பயிற்சிப் பெற்ற ஆசிரியர்களே நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை கூட ஏற்பாடு செய்யலாம். ஆனால் இடங்களுக்கு தகுந்த மாதிரிதான் இந்தப் பதவிகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. சில இடங்களில் பட்டம் பெற்ற வேலையில்லாதவர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர்களை வைத்துத்தான் நடத்தமுடியும் என்பதுபோன்று இருக்கிற இடங்களில் ஆசிரியர்கள் பகுதிநேர வேலை பார்க்கிறார்கள். இது வெறும் வேலை பிரச்சினை என்பது போன்று இல்லாமல், சேவை மனப்பான்மை மிகுதியாக தேவைப்படுவதால் உண்மையாகவே சேவை மனப்பான்மை உள்ளவர்களை வைத்துத் தான் இந்த திட்டத்தை அமுல் நடத்தும் வகையில் நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது.

திரு. கா. கோபால்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறைசாராக் கல்வித் திட்டத்தை தன்நிறைவுத் திட்டத்தின் ஒரு அம்சமாக சேர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அப்படி சேர்க்கப்பட்டுத்தான் இப்போது நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. இனி எடுக்கப்படுகிற தன்னிறைவுத் திட்ட யூனிட்டுகளிலும் சேர்த்துக் கொள்ளப்படும். முதியோர் கல்வி தன்னிறைவுத் திட்டமானாலும், பொருளாதார வளர்ச்சி திட்டமானாலும் இது முதல் இடம் பெறவேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றிருக்கிறது.

பாண்டிய ராஜபுரத்தில் பாலிடெக்னிக் அமைக்கும் திட்டம்

*வினா எண். 287 : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலக்கோட்டை தாலுக்கா பாண்டிய ராஜபுரத்தை ஒட்டி தனியார் துறையில் பாலிடெக்னிக் அமைப்பதற்காக அரசிற்கு ஏதேனும் மனு வந்ததா ?

(ஆ) ஆம் எனில், அரசு இது பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது பாண்டிய ராஜபுரத்தை ஒட்டி தனியார் துறையில் பாலிடெக்னிக் அமைப்பதற்கான மனு எதுவுமே வரவில்லை என்று சொல்கிறார்கள். மனு அனுப்பி அதற்கான பதிலும் தனியாருக்குச் சென்றிருக்கிறது. I like to inform you that the Government have already finalised the matter regarding the establishment of new polytechnics for the year 1980-1981. என்று அவர்களுக்கு டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜூகேஷன் அவர்களிடமிருந்து பதில் சென்றிருக்கிறது. அதனால் மனுவே வரவில்லை என்று இந்தச் சட்டமன்றத்திலேயே கனம் அமைச்சர் அவர்கள் சொல்வதை என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. தயவுசெய்து விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சர்க்கார் அளவிற்கு என்றால் செகரட்டேரியேட் அளவிற்கு வந்த பிறகுதான் நாங்கள் பரிசீலிப்போம். அங்கு வருகிற கடிதத்தை அவர்கள் பரிசீலித்து எங்களுக்கு வந்தது என்றால் நாங்கள் பரிசீலனை செய்கிறபோதுதான் அது பரிசீலிக்கப்படுகிறது என்று சொல்கிறோம். ஆகவே இதில் முரண்பாடு எதுவும் இல்லை.

முற்பகல் 9-40

திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்கள் இந்த கேள்விக்கு பதில் அளிக்கிறபோது, செயலாளருக்கு வந்து செயலாளர் பதில் அனுப்பியிருப்பார்களேயானால் அது அரசாங்கத்திற்கு வந்தது அல்ல என்ற கருத்தைத் தெரிவிக்கிறார்கள். ஆனால் கேள்விகளுக்கு விடைகள் தயாரிப்பது செயலாளர்கள் தான். செயலாளர்கள் கையெழுத்திட்டு அமைச்சர்களுக்கு அந்த விடைகள் வந்து அதற்குப் பின்னால் அமைச்சர்களும் கையெழுத்திட்டு பின் அது சட்டமன்றத்திற்கு வருகிறது. எனவே செயலாளருக்கு விண்ணப்பங்கள் வந்து அவை மறுக்கப்பட்டிருந்தால்கூட அவை அரசாங்கத்திற்கு வந்ததாகத்தான் கருத வேண்டுமே தவிர அரசாங்கத்திற்கு வரவில்லை என்று

1981 பிப்ரவரி 27]

பதில் சொல்வது இந்தச் சட்டமன்றத்திற்கு அரசாங்கம் எந்த வகையில் பொறுப்பாக செயலாற்றவேண்டுமோ அதற்கு முரணாக இருக்கிறது என்பதை நான் தலைவர் அவர்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நான் சொன்னதை சரியாகக் கேட்டுக்கொள்ளாமல் எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் பதில் சொல்லியிருப்பது குறித்து வருந்துகிறேன். டைரக்டர் ஆப் டெக்னிகல் எட்யூக்கேஷனுக்கு வந்தது பற்றித் தான் சொன்னேனே தவிர இங்கு வந்ததை நான் வரவில்லை என்று சொல்லவில்லை, பொறுப்போடுதான் இந்த அரசாங்கம் நடைபெறும்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: எப்படியோ, இந்த மனு வந்திருக்கிறது. நிலக்கோட்டை தாலுகாவில் மட்டும் கிட்டத் தட்ட இருபதுக்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. எனவே தயவுசெய்து அமைச்சர் அவர்கள் அந்த மனுவை வரவழைத்து மறு பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு இந்த ஆண்டிலாவது இந்த பாலிடெக்னிக் அமைப்பதற்கு உதவி செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நாம் இத்தகைய பிரச்னைகளை பரிசீலிக்கிறபோது தமிழ்நாடு முழுவதையும் வைத்துத்தான் பரிசீலிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் அரசாங்கம் ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிப்பது என்றால் முதலில் அது எங்கே எங்கே இல்லை என்பதைப் பார்த்து ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் இல்லை, அதேபோல் நீலகிரி மாவட்டத்திலும் இல்லை. இந்த இரண்டு மாவட்டங்களிலும் நாம் ஆரம்பிப்பது என்று ஒருமுடிவை அரசாங்கம் முன்னரே அறிவித்து அதைச் செயல்படுத்துகிற நிலையில்தான் அரசு இருந்து வருகிறது. அடுத்த ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் பாலிடெக்னிக் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற முறையில் இருக்கிறது. அதற்கு அடுத்து நீலகிரி மாவட்டத்தில் கொண்டுவர விரும்பு கிறோம். தனிப்பட்டவர்கள் யாராவது இதில் ஆர்வம் கொண்டு வருவார்களேயானால் அதைப் பற்றி நாம் பரிசீலிக்கலாம்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: பாலிடெக்னிக், ஐ.டி.ஐ., பள்ளிகள் இவற்றை ஒருசில நகரங்களில் மட்டும் குவித்து வைத்திருக்கிறார்கள். அவற்றை டீஸென்ட்ரலைஸ் செய்து, பரவலாக்கி மாயனூர் போன்ற பகுதிகளிலும் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, பாண்டியராஜபுரத்தில் பாலிடெக்னிக் அமைப்பது பற்றியது.

திரு. ப. நெடுமாறன் : தனிப்பட்டவர்கள் பாலிடெக்னிக் ஆரம்பிக்க முன்வந்தால் அரசாங்கம் அதுபற்றி ஆராயும் என்று அமைச்சர் அவர்கள் விடையளித்தார்கள். சம்பந்தப்பட்ட பாலிடெக்னிக்கை மதுரை ஷுகர்ஸ் லிமிடெட் என்ற தனியார் நிறுவனம் ஆரம்பிப்பதற்கு முன்வந்து அதற்கான மனுவை அரசுக்கு அனுப்பி அது பரிசீலிக்கப்படுகிறது என்று பதிலும் வந்திருக்கிறது, அதில் ஷுகர் டெக்னாலஜியை மையமாக வைத்து இந்த பாலிடெக்னிக்கை ஆரம்பிப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை, திண்டுக்கல், பெரியகுளம் தாலுக்காக்களிலுள்ள கிராமங்களில் கரும்பு பயிரிடுகிற விவசாயிகள் நிறைய இருக்கிறார்கள். அவர்களது குழந்தைகள் படிக்கும் வகையில் ஷுகர் டெக்னாலஜியை மையமாக வைத்து ஒரு தனிப்பட்டவர் அந்த பாலிடெக்னிக்கை ஆரம்பிக்க முன்வந்திருப்பதால் அடுத்த கல்வியாண்டிலாவது இதற்கான அனுமதியை அரசு வழங்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலே, இவர்களுக்கு மட்டுமல்ல; மற்றவர்களுக்கும் பொருந்தும் என்ற முறையிலே சொன்னேன். இந்த சர்க்கரை ஆலை கம்பெனி விண்ணப்பம் செய்து, இவர்களுக்குத் தரவேண்டுமென்ற முறையிலே அல்ல. பொதுவாகவே சொன்னேன்; யார் வேண்டுமானாலும் இத்தகைய முயற்சியிலே இறங்கலாம். நம்முடைய தமிழ் மாநிலத்திற்குத் தேவையாக இருக்குமானால், அதை பரிசீலனை செய்யலாம். இப்போது விண்ணப்பித்த பிறகு பரிசீலனையில் பல கட்டங்கள் இருக்கின்றன. அது முடிந்த பிறகுதான், ஒரு முடிவான உத்தரவை போட வேண்டும். அடுத்த ஆண்டே செய்ய வேண்டுமென்றால், நான் இப்போது எந்த விதமான உத்தரவாதமும் தர முடியாது.

TRUTH ALONE TRIUMPHS

தமிழ் பல்கலைக் கழகம் நிறுவும் திட்டம்.

*வினா எண் 288—திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தமிழ் பல்கலைக் கழகம் நிறுவுவது தொடர்பாக அரசு ''நிபுணர் குழு'' அமைக்கப் பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.